FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318749

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year: ஆண்டு **2026** FIR No.: முத.அ. எண் **09/2026** Date: நாள் **09.09.2026**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7(b)**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை **28.08.2026 To 08.09.2026 at about 13.00 hrs**

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **09.09.2026** Time : நேரம் **09.00 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **09.09.2026** Time : நேரம் **09.30 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி **VAO Office, Kayamozhi Village Thiruchendur Taluk About 45 Kms South**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **திரு.த.மதிபால்**

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **தங்கதுரை**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **1971**

(d) Nationality : நாட்டினம் **இந்தியன்**

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில்

(g) Address : முகவரி **11/217A, ஆதித்தனார் காலனி, காயாமொழி அஞ்சல், திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.தனசேகர், கிராம நிர்வாக அலுவலர், காயாமொழி கிராமம், திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10 Total value of properties stolen / involved : ----
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: ----
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed V.Annalakshmi Inspector of Police Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

09/09/2026

09/09/2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court 09.09.2026 at 10.20 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் V. ANNALAKSHMI
Rank: நிலை ..... No. எண் .....

Inspector of Police
V & PS, Thoothukudi

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.09/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

இன்று 09.09.2026-ம் தேதி காலை 09.00 மணிக்கு V.அன்னலெட்சுமி, காவல் ஆய்வாளர், தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது, திருச்செந்தூர் தாலுகா, காயாமொழி அஞ்சல், ஆதித்தனார் காலனி, கதவு எண்.11/217A என்ற முகவரி கொண்ட திரு.த.மதிபால், த/பெ தங்கதுரை என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவில் தனது மகள் திருமதி.ஜாஸ்மின் தற்போது தன்னுடன் காயாமொழி கிராமத்தில் வசித்து வருவதாகவும், அவர் காயாமொழி கிராமம் சர்வே எண் 600/2B -ல் 0.18.00 ஹெக்டேர் மற்றும் சர்வே எண் 600/3A-ல் 0.17.50 ஹெக்டேர் ஆக மொத்தம் 0.35.50 ஹெக்டேர்க்கு சமமான 87.68 சென்ட் புஞ்சை நிலத்தினை வாங்கியுள்ளதாகவும், அதில் தென்னைமரம் மற்றும் எலுமிச்சை மரம் வைத்து தோட்டத்தை தான்தான் கவனித்து வருவதாகவும், அதில் சிறு குறு விவசாயிகளுக்கு அரசால் மானிய முறையில் வழங்கப்படும் சொட்டு நீர் பாசனத்தில் விண்ணப்பிப்பதற்கு வேண்டிய வேலைகள் சம்பந்தமாக காயமாமொழி கிராம நிர்வாக அலுவலர் திரு.தனசேகரை ஆகஸ்ட் மாதத்தில் இருந்தே சந்தித்து வருவதாகவும், அது சம்பந்தமாக இ-சேவை மையம் மூலம் சிறுகுறு விவசாயி சான்றிதழும், கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கல் பெற்று விட்டதாகவும், அதன் பின்னர் நிலத்தில் கிணறு அல்லது மோட்டார் உள்ளது என்று அடங்கலில் சான்று பெற வேண்டும் என கேள்விப்பட்டதின் பேரில் மீண்டும் கிராம நிர்வாக அலுவலரை பலமுறை சந்ததித்ததாகவும் கடைசியாக நேற்று (08.09.2026) மதியம் கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து மனு அளித்த போது, அதற்கு காயாமொழி நிர்வாக அலுவலர் திரு.தனசேகர் அவர்கள் 10(1) அடங்கலில் போர் இருப்பதற்கான சான்றும், குஆடி நகலில் உண்மை நகல் என எழுதி கையொப்பமிட்டு சான்றும் கொடுத்தார் என்றும், ஏற்கனவே சிறுகுறு விவசாயி சான்றிதழ் வழங்க பரிந்துரை செய்து பெற்று வழங்கியதற்கு ரூ.2,000/-மும், நேற்று (08.09.2026) கொடுத்த சான்றுகளுக்கு ரூ.500/-ம் ஆக மொத்தம் ரூ.2,500/- லஞ்சமாக கேட்டதாகவும் தெரிவித்து, எனவே புகார்தாரர் திரு.மதிபால் அவர்களிடம் லஞ்சமாக ரூ.2,500/- பணம் கேட்கும் காயாமொழி கிராம நிர்வாக அலுவலர் திரு.தனசேகர் மீது

நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட காயாமொழி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் திரு.தனசேகர் பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்து அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 09/2026 பிரிவு 7(b) of the P.C. Act, 1988 as Amended in 2018-படி 09.09.2026-ம் தேதி காலை 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் : த.மதிபால், வயது 56, த/பெ.தங்கதுரை, 11/217A, ஆதித்தனார் காலனி, காயாமொழி அஞ்சல், திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். செல் : 9445328535 பெறுநர் : காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா / அம்மா, நான் மேற்படி முகவரியில் என் குடும்பத்துடன் கடந்த 6 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு 2 மகன் 1 மகள் உள்ளனர். எனது மகள் ஜாஸ்மினை கடலூரில் திருமணம் செய்து கொடுத்து அவரது கணவர் துபாயில் வேலை செய்து வருவதால் மகள் ஜாஸ்மின் தற்போது என்னுடன் வசித்து வருகிறாள். கடந்த 2024-ம் ஆண்டு என் மகள் ஜாஸ்மின் எங்கள் ஊரில் வசித்து வரும் மதிமலர் என்பவரிடமிருந்து திருச்செந்தூர் தாலுகா, காயாமொழி கிராமம் சர்வே எண் 600/2B-ல் அமைந்துள்ள 0.18.00 ஹெக்டேர், சர்வே எண் 600/3A-ல் அமைந்துள்ள 0.17.50 ஹெக்டேர், ஆக மொத்தம் 0.35.50 ஹெக்டேர்க்கு சமமான 87.68 சென்ட் புஞ்சை நிலத்தில் போர்வெல் கிணறும் மோட்டார் பம்புசெட், அதில் அமைந்துள்ள மின் இணைப்பு எண்.SC No:07-362-001-424 கொண்ட மின் இணைப்புடன் உள்ள புஞ்சை நிலத்தை ரூ.6 இலட்சத்திற்கு கிரையத்திற்கு வாங்கினார். அதில் தென்னை மரம் மற்றும் எலுமிச்சை மரம் வைத்து தோட்டத்தை நான் தான் கவனித்து வருகிறேன். சிறு குறு விவசாயிகளுக்கான நிலத்திற்கு அரசால் மானியமுறையில் வழங்கப்படும் சொட்டுநீர் பாசனத்திற்காக நானும் எனது மகள் ஜாஸ்மினும் கடந்த 27.08.2026-ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் காயாமொழி VAO திரு.தனசேகர் அவர்களை நேரில் சென்று பார்த்து விபரம் கேட்டோம். அப்போது அவர் என் மகளின் இடத்திற்குரிய 10(1)அடங்கலை

எழுதி எங்களிடம் கொடுத்து விட்டு, பரமன்குறிச்சி மற்றும் பள்ளிபத்து VAO விடம் எனது மகள் பெயரில் வேறு நிலங்கள் ஏதும் இல்லை என்று சான்று வாங்கி, அந்த அடங்கலுடன் சேர்த்து மேற்படி காயாமொழியில் உள்ள நிலத்திற்கு சொட்டுநீர் பாசனம் செய்வதற்கு ஆன்லைனில் விண்ணப்பிக்குமாறு கூறினார். அதன்பின்னர் அன்றைய தினமே மேற்படி பரமன்குறிச்சி மற்றும் பள்ளிபத்து VAO விடம் சான்றுகள் பெற்றும், இடத்தின் பத்திரம், அடங்கல், பட்டா, மகளின் ஆதார் கார்டு ஆகியவற்றுடன் கடந்த 27.08.2026ம் தேதியன்று சிறு குறு விவசாயிக்கான சான்றிதழ் பெற மனு எண் TN - 920260827926-ன் படி இ-சேவை மையம் மூலம் விண்ணப்பித்து ரூ.60/- செலுத்தி ஒப்புகை சீட்டு பெற்றேன். அதன் பின்னர் நான் 28.08.2026-ம் தேதி சுமார் 11.30 மணியளவில் VAO அலுவலகம் சென்று எனது மகளின் மனு சம்பந்தமாக சென்று விசாரித்த போது அவர் என்னிடம் சிறுகுறு விவசாயி சான்றிதழ் பெற பரிந்துரை செய்து தாலுகா அலுவலகம் மூலம் பெற்று கொடுக்க வேண்டும் என்றால் அவருக்கு லஞ்சமாக ரூ.1000/- மற்றும் அவருடைய உயரதிகாரிக்கு ரூ.1500/- ஆக மொத்தம் ரூ.2,500/- லஞ்சமாக தர வேண்டும் என்று கூறினார். நானும் வேறு வழியின்றி சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்பு 31.08.2026-ம் தேதி நான் இ-சேவை மையம் சென்று கேட்ட போது ஆன்லைனில் சிறுகுறு விவசாயிக்கான சான்றிதழ் வந்து விட்டதாக கூறி எனக்கு நகல் ஒன்று எடுத்து கொடுத்தார்கள். பின்பு எங்கள் ஊரிலுள்ள சொட்டுநீர் பாசனம் அமைப்பது தொடர்பாக விபரம் தெரிந்த ராஜ் என்பவரிடம் விபரம் கேட்டதற்கு, நிலத்திற்கான 10(1) அடங்கலில் கிணறு அல்லது மோட்டார் உள்ளது என்று VAO விடம் சான்றிதழ் பெற வேண்டும் என்று கூறினார். எனவே நான் மீண்டும் 03.09.2026-ம் தேதி சுமார் 12.00 மணியளவில் VAO வை நேரில் சென்று அவரது அலுவலகத்தில் பார்த்த போது, நான் விண்ணப்பம் செய்த சிறுகுறு விவசாயிக்கான சான்றிதழ் வேலையை முடித்து கொடுத்ததற்கு நான் கேட்ட ரூ.2,500/-ம் பணத்தை கொடுத்து விட்டு இந்த அடங்கலை வாங்கி செல்லும்படி கூறினார். பின்னர் நான் என்னுடைய சொந்த வேலையாக வெளியூர் சென்று விட்டபடியாலும், என் மகள் ஜாஸ்மின் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால் சிகிச்சைக்காக கடலூர் சென்றுவிட்டபடியாலும் VAO வை பார்க்க செல்லவில்லை. பின்னர் நான் 07.09.2026ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் VAO வை நேரில் சென்று பார்த்து மேற்படி அடங்கல் பற்றி கேட்ட

போது, அவர் நான் கேட்ட பணம் என்ன ஆச்சு என்று கேட்டார். நான் தற்சமயம் என்னிடம் இருந்த பணம் செலவாகிவிட்டது, தற்போது வெறும் ரூ.500/- மட்டும் தான் கையில் உள்ளது என்று கூறினேன். உடனே அவர் சரி அந்த பணத்தை என்னிடம் இப்போது கொடுங்கள் என்று கட்டாயப்படுத்தி கேட்டதால் வேறு வழியின்றி அவரிடம் ரூ.500/-ஐ கொடுத்துவிட்டேன். பின்பு இன்று 08.09.2026-ம் தேதி காலை திருச்செந்தூர் BDO ஆபீஸ் சென்று அக்ரி டிபார்ட்மெண்ட்-ல் மேற்படி அடங்கலின் சான்றிதழ் தேவையா என விசாரித்த போது அவர்கள் கட்டாயம் வேண்டும் என்று கூறியதால் நான் மறுபடியும் ஒரு மனு எழுதி 08.09.2026-ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் VAO வை நேரில் சென்று அவரது அலுவலகத்தில் பார்த்த போது அவர் மேற்படி மனுவை என்னிடம் வாங்கி படித்து விட்டு அவர் மேஜை மீது வைத்து விட்டு, VAO வின் பைக்கில் என்னைக் கூட்டிச் சென்று இடம், போர்வெல் ஆகியவற்றைப் பார்த்துவிட்டு பின்பு அலுவலகம் வந்து 10(1) அடங்கலில் போர் இருப்பதற்கான சான்றும், FMB நகலில் உண்மை நகல் என எழுதி கையொப்பமிட்டு சான்றும் கொடுத்தார். அதனை தந்தபின்பு என்னிடம் அவர் ஏற்கனவே தந்த சிறுகுறு விவசாயிக்கான சான்றிதழுக்கு லஞ்சமாக கேட்ட மீதி பணம் ரூ.2,000/- மற்றும் தற்போது கொடுத்த 10(1) அடங்கலுக்கு ரூ.500/-ம் ஆக மொத்தம் ரூ.2,500/-ஐ என்னிடம் கேட்டார். நான் தற்போது என்னிடம் பணம் இல்லை என சொன்னேன். உடனே அவர் நாளை (09.09.2026) ரூ.2,500/-ஐ கொண்டு வந்து கொடுக்கும் படி கேட்டார். நானும் அவரிடம் வேறு வழியில்லாமல் சரி சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நான் வீட்டிற்கு வந்து என் மகளிடம் கலந்துவிட்டு யோசித்து பார்த்த போது ஒரு அரசு அதிகாரி அவரது கடமையை செய்ததற்கு இப்படி லஞ்சம் கேட்டு தொந்தரவு செய்கிறாரே என்று எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டது. எனக்கும் எனது மகளுக்கும் லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத காரணத்தால் நான் இந்த புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். என் மகளுக்கு வழங்கப்பட்ட சிறு குறு விவசாயி சான்றிதழுக்கும், மற்றும் நிலத்தின் , அடங்கல் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கியதற்கும் என்னிடம் லஞ்சமாக ரூ.2,500/- கேட்ட காயாமொழி கிராம நிர்வாக அலுவலர் திரு.தனசேகர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு.தனசேகரைக் கையும் களவுமாக பிடிக்க ஒத்துழைப்பு தருவேன் என தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு xxxxxx s/d., by த.மதிபால் 09/09/2026. இணைப்பு : 1) ஒப்புகைச்சீட்டு - சிறு குறு விவசாயிக்கான சான்றிதழ்

பெற மனு எண் TN - 920260827926-ன் நகல். 2) திருமதி.ஜாஸ்மின் என்பவரின் பெயரில் ரூ.6 இலட்சத்திற்கு கிரையம் செய்யப்பட்ட ஆவண எண்.2790/2024ன் நகல். 3) திருமதி. ஜாஸ்மின், க/பெ.ஐயப்பன் என்பவருக்கு சிறு குறு விவசாய சான்றிதழ் வழங்குவதற்காக பரமன்குறிச்சி VAO வழங்கிய சான்றின் நகல். 4) திருமதி. ஜாஸ்மின், க/பெ.ஐயப்பன் என்பவருக்கு சிறுகுறு விவசாய சான்றிதழ் வழங்குவதற்காக பள்ளிப்பத்து VAO வழங்கிய சான்றின் நகல். 5.) திருமதி. ஜாஸ்மின் என்பவருக்கு காயாமொழி VAO 27.08.2026-ம் தேதியிட்டு லழங்கிய 10(1) அடங்கலின் நகல். 6). திருமதி. ஜாஸ்மின், க/பெ.ஐயப்பன் என்பவரின் ஆதார்கார்டு நகல். 7) திருமதி.ஜாஸ்மின் என்பவருக்கு வழங்கப்பட்ட சிறு குறு விவசாயிக்கான சான்றிதழ் நாள் 31.08.2026. 8) திருமதி.ஜாஸ்மின் என்பவருக்கு காயாமொழி VAO 08.09.2026-ம் தேதி 10(1) அடங்கலில் போர் இருப்பதாக வழங்கிய சான்றின் நகல். 9) திருமதி. ஜாஸ்மின் என்பவருக்கு காயாமொழி VAO 08.09.2026-ம் தேதி FMB-ல் உண்மை நகல் என்று எழுதி வழங்கிய சான்றின் நகல். Sir, Received by me on 09.09.2026 at 09.00 hrs & verified the antecedents of both the complainant and the accused, and after getting the oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and I registered a case in Thoothukudi V&AC Cr.No.09/2026, u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as Amended in 2018 at 09.30 hrs. xxxxxx s/d., by V.ANNALAKSHMI 09.09.2026, Inspector of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, வாதியின் அசல் புகார் மனு மற்றும் புகார் மனுவுடன் இணைக்கப்பட்டிருந்த இணைப்புகள் ஆகியவற்றை இணைத்து கனம் தூத்துக்குடி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது விசாரணைக்கும் எடுத்துக் கொண்டேன்.

09/9/2026

Inspector of Police
V&AC, Thoothukudi.